DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Selvi**.M. Mayadevi,B.A., L.L.B.,
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | CC.No.26/2011 |
| Deposition of Witness for Prosecution | PW: 1 (LW: 1) |
| Cr.No. and Police Station : | 252/2009, **சேத்தியாதோப்பு காவல்நிலையம்** |
| Name: | **திரு.தில்லை நடராஜன்** |
| Father's /Husband Name: | **த.பெ. சண்முகம்** |
| Village: | **அள்ளுர்** |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 01.07.2025** | |

A1, A2 called absent. U/s.317 Cr.PC petition filed and allowed.

**முதல் விசாரணை :**

நான் அள்ளூரில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை இட்ட தேதி நினைவில்லை 8 - 9 வருடங்களுக்கு முன்பு அந்த கையொப்பம் இட்டேன். எங்கள் தெருவில் போலீஸார் வந்து இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள் அப்போது போலீஸாரிடம் மேற்படி கையொப்பத்தை போட்டுக் கொடுத்தேன். தாங்கள் அங்கு வந்ததற்காக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக் கொடுத்தேன். **எனது மேற்படி சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும்.** போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அ.சா.1 மகேந்திரன் வசிக்கும் தெருவிற்கு அடுத்த தெருவில் நான் வசிக்கிறேன். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் உள்ளவாறு தான் சம்பவ இடத்தின் நில அமைப்பு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த 30.09.2009 ந்ன தேதி மதியம் சுமார் 1.45 மணியளவில் சேத்தியாதோப்பு காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் இந்த வழக்கின் சம்பவ இடத்திற்கு வந்து அங்கிருந்த மணிகண்டன் மற்றும் என் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார் என்றாலும் எங்கள் முன்னிலையில்

தயார் செய்யப்பட்ட பார்வை மகசரில் நானும், மணிகண்டனும் சாட்சி கையொப்பங்கள் இட்டோம் என்றால் அவர்கள் வரைபடம் வரைந்தது, மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றி தெரியாது.ஆனால் விசாரித்தார்கள். மணிகண்டன் என்னுடன் சேர்ந்து சாட்சி கையொப்பம் இட்டார் என்றால் தெரியாது. விசாரணை அதிகாரி என்னை விசாரித்தபோது மேற்கண்ட உண்மை சங்கதிகளை தெரிவித்தேன் என்றாலும் தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கிணங்க எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

மகேந்திரன் என்பவரின் வீடு உள்ள தெருவும் , நான் கையொப்பம் இட்ட இடமும் வேறு என்றால் சரிதான்.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-**Selvi**.M. Mayadevi,)
J.M.No.I, Chidambaram